/பதிவஞ்சல் / ஒப்புகையுடன்/

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி)
செயல்முறைகள், சென்னை-6
ந.க.எண்.050539/ஜே/இ1/2023, நாள் 27.02.2024

********

001275

முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம் இராணிப்பேட்டை 401. 08 MAR 2024

பொருள் : கருணை அடிப்படையில் பணி நியமனம் – இராணிப்பேட்டை மாவட்டம் – முப்பதுவெட்டி, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி – இடைநிலை ஆசிரியர் திருமதி.சுலைக்கா சுல்தானா – 08.07.2015-ல் இறப்பு – மகன் திரு.ச.பைசல் அகமது – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி வழங்கப்பட்டது – பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசால் வெளியிடப்பட்ட ஆணை அசல் அனுப்புதல் – சார்ந்து.

1. இராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செ.மு ந.க.எண்.3819/அ1/ 2022, நாள் 12.10.2022.
2. இராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் ந.க.எண்.3274/அ1/2021, நாள் 30.06.2023.
3. அரசாணை (2டி) எண்.191, பள்ளி கல்வித் [தொக.3(1)] துறை நாள் 29.12.2023.

-----

இராணிப்பேட்டை மாவட்டம், முப்பதுவெட்டி, ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளியில் இடைநிலை ஆசிரியராக பணிபுரிந்த போது 08.07.2015-ல் காலமான திருமதி.சுலைக்கா சுல்தானா என்பவரின் வாரிசுதாரரான மகன் திரு.ச.பைசல் அகமது என்பவருக்கு பார்வை 1-ல் கண்டவாறு இராணிப்பேட்டை முதன்மைக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமன ஆணை வழங்கப்பட்டு, பணிபுரிந்துவரும் அன்னாருக்கு பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து பார்வை 3-ல் கண்டவாறு அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு பணிவரன்முறை செய்து அரசால் ஆணை வழங்கி வெளியிடப்பட்டுள்ள அசல் ஆணை மற்றும் கீழ்கண்ட அசல் ஆவணங்கள் மற்றும் பணிப்பதிவேடு ஆகியவை இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது. அவற்றினை பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலினை மறு அஞ்சலில்

அனுப்புமாறு இராணிப்பேட்டை மாவட்ட முதன்மை கல்வி அலுவலருக்கு தெரிவிக்கலாகிறது.

மேலும், மேற்கண்ட பணிவரன்முறை ஆணை குறித்து தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்வது சார்ந்து தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு உறுதி செய்திடவும் முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு:

1. பணிவரன்முறை செய்து அரசால் வெளியிடப்பட்ட அசல் ஆணை–1
2. மனுதாரருக்கு கருணை அடிப்படையில் முதன்முதலில் பணிவாப்பு கோரிய விண்ணப்பம் அசல் –1
3. மனுதாரர் கருணை அடிப்படையில் முதன்முதலில் பணிவாய்ப்பு கோரிய விண்ணப்பம் அசல்–1.
4. 17 கலம் கொண்ட படிவம் அசல்.
5. இறப்பு சான்று அசல்–1
6. வாரிசு சான்று அசல்–1
7. ஒருங்கிணைந்த சான்று அசல்–1
8. ஆட்சேபணையின்மை அசல் கடிதங்கள்–2
9. அரசாணை எண்.29ன் படியான உறுதி மொழி படிவம் அசல்
10. தமிழ்நாட்டில் எங்கும் பணிபுரிய விருப்பு கடிதம் அசல்
11. 10ம் வகுப்பு மதிப்பெண் பட்டியல் அசல்–1 SEC 4053212/ REG.NO.3588897/ MAR2014
12. 10ம் வகுப்பு மதிப்பெண் பட்டியலின் உண்மைத் தன்மை குறித்த அறிக்கை அசல்–1
13. காலகெடு சான்று அசல்
14. இறந்த அரசு ஊழியரின் பணிப்பதிவேட்டின் முதல் பக்க நகல்.
15. இறந்த அரசு ஊழியர் பணியினை பணிவரன்முறை செய்தமைக்கான பதிவுகள் கொண்ட பணிப்பதிவேட்டின் முதல் பக்க நகல்.
16. பணிநியமன ஆணை அசல்.
17. தனியரது பணிப்பதிவேட்டின் முதல் பக்க நகல்.
18. தனியர் பணியில் சேர்ந்த பதிவுகள் கொண்ட பணிப்பதிவேட்டின் பக்க நகல்.
19. தனியரின் பணிப்பதிவேடு அசல் – 1 தொகுதி

28/02/24

இணை இயக்குநர்
(பணியாளர் தொகுதி)

28/02/2024

பெறுநர் : முதன்மைக் கல்வி அலுவலர்,
இராணிப்பேட்டை மாவட்டம். (பெயரிட்ட உறையில்)

**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – கருணை அடிப்படை பணி நியமனம்– இராணிப்பேட்டை மாவட்டம், முப்பதுவெட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான திருமதி.சுலைக்கா சுல்தானா என்பவரின் வாரிசுதாரரான அவரது மகன் திரு.ச.பைசல் அகமது என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி வழங்கியது – திரு.ச.பைசல் அகமது என்பவரின் பணியினை 14.10.2022 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக்கல்வித்(தொக3(1))துறை**

அரசாணை(2டி) எண். 191

நாள் 29.12.2023
திருவள்ளுவர் ஆண்டு–2054
சோபகிருது வருடம்,
மார்கழி– 13
படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த் துறை, நாள் 01.08.2018.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 26.02.2021.
3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 050539/ஜே/இ1/2023, நாள் 18.10.2023.

–*–

**ஆணை:–**

இராணிப்பேட்டை மாவட்டம், முப்பதுவெட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்து வந்த திருமதி.சுலைக்கா சுல்தானா என்பவர் பணிக்காலத்தில் 08.07.2015 அன்று காலமானார் என்றும், அவரது வாரிசுதாரரான அவரது மகன் திரு.ச.பைசல் அகமது என்பவர் பார்வை இரண்டில் காணும் அரசாணையின்படி, இராணிப்பேட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரால் கருணை அடிப்படையில் இராணிப்பேட்டை முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் தற்காலிகமாகப் பணிநியமனம் செய்யப்பட்டார் என்றும் தெரிவித்து, அன்னாரின் பணியினை நியமன நாள் முதல் வரன்முறை செய்யுமாறு மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக்கல்வி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவர்களது பணியினை வரன்முறை செய்ய தேர்வாணையத்தின் இசைவு பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக்கல்வி இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில், இராணிப்பேட்டை மாவட்டம், செலாளிப்பாறை இராணிப்பேட்டை மாவட்டம், முப்பதுவெட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் 08.07.2015 அன்று மரணமடைந்த திருமதி.சுலைக்கா சுல்தானா என்பவரின் வாரிசான, அவரது மகன் திரு.ச.பைசல் அகமது என்பவர் கருணை அடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், இராணிப்பேட்டை மாவட்டம், முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்தில், இளநிலை உதவியாளராக 14.10.2022 முற்பகல் முதல் நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும், அவரது பணியினை வரன்முறைப்படுத்திட, அவர் தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர் பணியில் சேர்ந்த நாளான 14.10.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்னாளிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவை இருப்பின், அவற்றை விதிகளின்படி பெறத் தனியர் தகுதியுடையவராகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.குமரகுருபரன்
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>

பள்ளிக் கல்வி இயக்குநர்,
சென்னை–6( தனியரின் பணிப்பதிவேடு மற்றும் ஆவணங்களுடன்)
தனியர் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)

**<u>நகல்</u>**

மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை–9.
அரசு செயலாளர் அவர்களின் முதன்மைத் தனிச் செயலாளர்,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித்(அநமு) பிரிவு, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்